# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

## நல்ல சமாரியன்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus

தழுவியவர்: Ruth Klassen; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


"போதகரே!  நித்திய ஜீவனை
சுதந்தரித்துக் கொள்ள நான்
என்ன செய்ய வேண்டும்?"
இந்தக் கேள்வியை கேட்ட
மனிதர் வக்கீலாக
இருந்தான்.


அவன் இயேசுவை
கேள்வியினால் மடக்க
நினைத்தான். "தேவனுடைய
கற்பனை என்ன சொல்லுகிறது?"
என்று இயேசு
மறுமொழி
கேட்டார்.


"தேவனிடத்தில் அன்பு
கூறு மற்றும் அயலானிடத்தில்
அன்பு கூறு" என்றான் அந்த
மனிதன். ஆனால், "என்னுடைய
அயலான் யார்?"
என்று
கேட்டான்.

அந்த மனிதனுக்கு பதில் கொடுக்கும் வகையாக எருசலேமிலிருந்து எரிகோவுக்கு சாலை வழியாக பிரயாணம் பண்ணின ஒரு மனிதனைப் பற்றிய கதையை சொன்னார்.



அந்த மனிதன் திருடர்களால் தாக்கப்பட்டான்.



திருடர்கள் துரதிஷ்டவசமாக அந்தப் பிரயாணியின் துணிமணிகள் முதற்கொண்டு, தங்கள் கையில் கிடைத்த எல்லாவற்றையும் திருடி சென்றார்கள்.




அவனைக் காயப்படுத்தி, சாலையருகில்
பாதி உயிருடன் விட்டு சென்றார்கள்.

தற்செயலாக அந்த வழியாக ஒரு ஆசாரியன் வந்தான். நிச்சயமாக அவன் காயப்பட்ட அந்த மனிதனுக்கு உதவிசெய்வான்.




இல்லை! இரத்தம் வடிந்து கொண்டிருக்கிற
அந்த மனுஷனைப் பார்த்து, சாலையின்
அடுத்தப் பக்கம் சென்று கடந்து
போய்விட்டான்.

சற்று நேரத்தில் வேறொருவர் வருகிற காலடி சத்தம் கேட்டது.  அவன் ஒரு லேவியன் - தேவாலயத்தில் ஆசாரியனுக்கு உதவி செய்கிறவன்.



அவன் போய், காயமுற்ற மனிதனைப் பார்த்தான், பின்பு அவனுக்கு உதவி செய்யாமல் அப்புறம் போய்விட்டான்.



கடைசியாக ஒரு சமாரியன் அந்த வழியாக வந்தான். யூத மக்கள் சமாரியர்களை வெறுத்தார்கள்.



இயேசுவின் கதையைக் கேட்டு கொண்டிருந்தவர்கள் ஒரு சமாரியன் வீரனாக வருவதை எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அவன் வந்தான். அந்த சமாரியன் அக்கறையுடன், குனிந்து உதவி செய்தான்.



சமாரியன்
முழங்காற்படியிட்டான்,
மற்றும் காயங்களுக்கு
கனிவாக மருந்து போட்டு,
அந்த அந்நியனின்
காயங்களை கட்டினான்.



சாலையோர சத்திரத்தில், அந்த சமாரியன் இரவு முழுவதும் கண் விழித்து அவனை கவனித்தான்.



காலையில் சத்திரக்காரனிடத்தில் பணத்தை கொடுத்து, அவன் நன்கு சுகமடையும் வரை கவனிக்க சொன்னான்.



கதை முடிந்தது. "அந்தக் காயப்பட்ட மனிதனுக்கு அந்நியன் யார்?" என்று இயேசு கேட்டார்.







வக்கீல் சொன்ன பதில்,
"அவனுடைய அந்நியன்
அவனுக்கு கருணைக்காட்டிய
அந்த சமாரியன்".


"போ, நீயும் அந்தப்படியே
செய்," இயேசு சொன்னார்.
தேவையில் இருப்பவனே
அயலான். ஜனங்களுக்கு
உதவிசெய்வதின் மூலமாக
நம்முடைய அன்பை
வெளிப்படுத்த
முடியும். அது
தேவனை
பிரியப்படுத்துகிறது.

நல்ல சமாரியன்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

லூக்கா 10

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16